செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 357 நாள் : 19-6-2017

## பத்திரிக்கைச் செய்தி

வேலூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ / மாணவியர்களுக்கென பின்வரும் இடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளி விடுதிகள் மற்றும் அரசு உண்டு உறைவிடப்பள்ளிகள் மொத்தம் 65 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | விடுதியின் விவரம் | ஆதிந மாணவர் விடுதி | ஆதிந மாணவியர் விடுதி | அரசு ஆதிந உண்டு உறைவிடப் பள்ளி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | பள்ளி விடுதிகள் | 24 | 14 | 15 | 53 |
| 2 | கல்லூரி விடுதிகள் | 07 | 05 | --- | 12 |
| | மொத்தம் | 31 | 19 | 15 | 65 |

பள்ளி விடுதிகளில் 4 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவ / மாணவியர்களும் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் அனைத்து வகுப்பைச் சேர்ந்த மாணவ / மாணவியர்களும் குறிப்பிட்ட விகிதாச்சாரத்தின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

> **விடுதிகளில் பின்வரும் சலுகைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.**

- அனைத்து விடுதி மாணவ / மாணவியருக்கும் உணவும் உறைவிடமும் இலவசமாக அளிக்கப்படுகிறது.
- 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு 4 செட் இலவச சீருடைகள் வழங்கப்படுகிறது.
- 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகிறது.
- 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகிறது.
- 10 மற்றும் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டிகள் இலவசமாக வழங்கப்படுகிறது.
- 10 மற்றும் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு வினா வங்கி புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

**விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்:**

> **ஒரு விடுதிக்கு தலா 5 நபர்கள் வீதம் அனைத்து விடுதிகளிலும், இலங்கை தமிழர்களின் குழந்தைகளுக்கு கட்டாயம் விடுதியில் சேர்க்க அனுமதிக்க வேண்டும்.**

- பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்த பட்சம் 8 கி.மீ க்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது.
- தகுதியுடைய மாணவ / மாணவியர் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்/காப்பாளினியிடமிருந்து அல்லது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் இருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்தவரை 12.07.2017 வரையும், கல்லூரி விடுதிகளை பொறுத்தவரை 21.07.2017 வரை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் **விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ள வேண்டியது.**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர் -9.

செ.ம.தொ.அ.
வேலூர்- 9. 19/6/17

16/06/17